பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ., எம்.ஓ.எல்., பிஎச்.டி

மலர் 1 | மதுரை ஐப்பசி உஉ (8-11-66) வெளியூர் ஐப்பசி உ௩ (9-11-66) | இதழ் 143

## தேவை

'குறள்நெறி' நாளிதழுக்குத் துணை ஆசிரியர் ஒருவரும், அச்சுக்கோப்பாளர்களும், அச்சுப்பொறியரும் (சிலிண்டர் மேன்) வேண்டப்படுகின்றனர் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ற ஊதியமளிக்கப்படும்.

செயலர்,
குறள்நெறி,
மதுரை-5

பத்தொன்பதாண்டு ஆட்சிக்குப் பின்னரும்......

# வறட்சிநிலைமை அஞ்சத்தக்கது

## இந்திரா பேச்சு

"பீகாரிலும் கிழக்கு உத்திரப் பிரதேசத்திலும் வறட்சியால் தாக்கப்பட்டுள்ள பகுதிகள் மிகவும் அஞ்சத்தக்கனவாய் உள்ளன." என்று பீகார் கிழக்கு உத்திரப் பிரதேசத்தைப் பார்வையிட்டு புதுதில்லி வந்து சேர்ந்த செய்தியாளர்களிடம் தலைமை அமைச்சர் இந்திராகாந்தி கூறினர்.

புதுதில்லி, நவ. 7-

வறட்சி நிலையாற் பெரிதும் அல்லலுற்ற பீகார், கிழக்கு உத்திரப்பிரதேசப் பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்ட தலைமை அமைச்சர் இந்திரா காந்தி இன்றுகாலை புதுதில்லி வந்து சேர்ந்தார்.

வானூர்தி நிலையத்தில் அவரைக் கண்டு பேசிய செய்தியாளர்களிடம் "வறட்சி நிலைமை மிகவும் அஞ்சத்தக்கதாய் உள்ளது" எனக்கூறினர்.

"பீகாரிலும், கிழக்கு உத்திரப்பிரதேசத்திலும் வறட்சியாற் தாக்கப்பட்டுள்ள பகுதிகள் மிகவும் அஞ்சத்தக்கனவாய் உள. அவற்றுக்கு இழப்பீடு அளிக்கும் வகையில் அவ்விரு மாநிலங்களுக்கும் கொடுக்கவேண்டிய உணவுப் பொருட்கள் முழுமையும் கொடுக்கும் அளவில் நடுவண் அரசிடம் கையிருப்பு இல்லை.

தற்பொழுதுள்ள நெருக்கடியைச் சமாளிக்க உழவர்கள் எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளும் அவர்களின் செயல் திறமையும் மகிழ்ச்சியளிப்பன வாக உள்ளன" என்று அவர் கூறினர்.

தொழிலாளர்களின் துயர் பற்றிக் கூறியபொழுது, "உழவர்களின் துன்பங்கள் சொல்லுந்தரமன்று; அவற்றை விட நிலமில்லாத உழவுத் தொழிலாளிகள் படுந்துயரமே மிகக் கொடுமையானதாகும், தங்களுக்கென நிலம் இல்லாததால் உழவுக்காலம் தவிர பிறகாலங்களில் அவர்கள் வேறு தொழில்களையே நாடவேண்டியுள்ளது. எனவே அவர்கள் நிலையற்றதோர் வாழ்வே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே சாலை அமைப்பு போன்ற வேலைகளை உடனடியாகத் தொடங்குமாறு இவ்விரு மாநில அரசினரையும் நடுவண் அரசு கேட்டுக் கொண்டுள்ளது. என்றும் கூறினா.

மேலும் இவ்வறட்சிப் பகுதிகளின் ஆக்க வேலைகளை இராமகிருட்டின நற்பணிக் கழகம் போன்ற பொதுநல அமைப்புக்கள் ஏற்று நடத்த வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இவ்வாக்கப் பணிகள் வட்டார மனப்பான்மையை நீக்க உறுதுணை செய்யும் என்றும் எனவே இவற்றை அனைத்திந்திய அளவில் செயலாற்ற வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## இந்திய அரசினரை எதிர்பார்க்க இயலாது! தொல்பொருள் ஆராய்ச்சிக்குத் தனித்துறை வேண்டும்

### -தமிழக முதலமைச்சர்

ஐப்பசி, 23 —

"தமிழகம் ஒன்றில் தான் தொல்பொருள்கள் மிகுதி இன்னும் தோண்டி எடுக்கவேண்டிய தொல்பொருள்கள் பலவாகும். இந்திய அரசு தமிழகத்தில் உள்ள எல்லாத் தொல்பொருள்களையும் ஆராய முயல்கிறார்கள் என்று எதிர்பார்க்க இயலாது இதற்கெனத் தமிழகத்தில் தனித்துறை அமைத்திடல் வேண்டும்" என்று தமிழக முதலமைச்சர், மதுரைப்புதுமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள தொல் பொருட்காட்சியைத் தொடங்கிவைத்த போது கூறினர்.

மேலும் அவர் கூறியதாவது:—

"முன்னோர்கள் நமக்கென வைத்துச்சென்றுள்ள உயரிய பொருள்கள் தொல் பொருள்கள். தமிழகம் ஒன்றில்தான் தொல் பொருள்கள் மிகுதி. இன்னும் தோண்டிப் பார்க்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன, இத்தொன்மைகளைக் கண்டு மகிழ உலகெங்கிலும் இருந்து வருகின்றனர். இந்திய அரசு தமிழகத் தொல் பொருள் ஆராய்ச்சியில் கருத்துச்செலுத்தி உதவுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. பிறரை நம்புவதனால் பயனில்லை. இதற்கெனத் தனித் துறையை நாம் அமைத்துத்தான் ஆக வேண்டும். இதற்கெனத் தனிச்சட்டம் இயற்ற வேண்டியுள்ளது.

இது தொடர்பான சட்ட வரைவு நேற்று சட்டமன்றத்தில் மூன்று மணி நேரம் ஆயப்பட்டது. கடவுள் நம்பிக்கை இல்லை என்பதை நாகரீகமாகக் கொண்டுள்ளவர்களும் இறைவன் ஒருவன் உளன் எனக் கூறக் கூசுபவர்களும் இச்சட்டவரைவைப்பெரிதும் வரவேற்றனர்-புதியது வேண்டும். அதற்கு அடிப்படை பழமை என்பதை அறிய வேண்டும்."

தலைமைதாங்கிய மதுரை மாவட்ட ஆளுநர் திரு சேசன் கூறியதாவது.

எங்குநோக்கிச் செல்கின்றோம் எதன் அடிப்படையில் வாழ்கின்றோம். என்பதை அறியாமல் உள்ளோம். சிறு சிறு கிளர்ச்சிகளில் தலைப்பட்டுள்ள நேரத்தில் எங்கே பழையகாலச் சிறப்புகளை மறந்து விடுவோமோ என அஞ்சுகின்றேன். நம்மைநாமே அறியா நிலை ஏற்பட்டால் அது வருந்தத் தக்கது."

இப்பொருட்காட்சியில் தமிழ் எழுத்து வளர்ச்சி சிறப்பிடம் பெற்றுள்ளது' தமிழ் நாட்டுக் கோயில் பணிகளும், பல்லவர்களால் கலைகளும் சோழகாலக் கலைகளும் கல்வெட்டின் படிகளும், இவை பற்றிய புகைப்படங்களும் அழகுற வைக்கப்பட்டுள்ளன.



## ஈரோட்டுக்கு அறிஞர் அண்ணா வருகை.

ஈரோடு, நவ. 7

ஈரோட்டுக்குஅறிஞர் அண்ணா இன்று வருகிறார். அவ்வமயம் பெரிய அக்கிரகாரம் ஊராட்சி மன்றம் அறிஞர் திரு அண்ணாவுக்கு வரவேற்பு அளித்துப் பாராட்டும் விழாவிலும் ஈரோடு சிக்கயப் பெருமகனார் பெருமக்கள் கல்லூரியில் மாணவர் மன்றத்திலும் அறிஞர் அண்ணா கலந்துகொள்வார் எனத் தெரிகிறது. அன்று ஈரோட்டில் மாபெரும் ஊர்வலமும் நகராட்சிக் குடியிருப்புத்திடலில் மாபெரும் பொதுக்கூட்டமும் நடைபெறும். ஈரோடு வழக்குரைஞர் மன்றத்திலும் அறிஞர் அண்ணா பேசுவர்.

## தீபாவளி அறிவுக்குப் பொருந்தாத கதையைக்கொண்டது

# குறள்நெறி

தமிழ் வாழ்க

தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 23 செவ்வாய் (8—11—66)


தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு. (436)

## தனக்கொன்று பிறர்க்கொன்று

மக்களாட்சியில் கிளர்ச்சியென்பது நோய்க்கு மருந்து போன்றதாகும். ஆட்சியாளரின் பொறுப்பை உணர்த்துவதற்குக் கிளர்ச்சிகள்தாம் கைகண்ட மருந்து. உலக முழுவதும் காணப்பெறும் ஒன்றாகும். இன்று ஆட்சியில் இருப்பவர்களும் அப்பொழுதைய ஆட்சியாளர்களைத் தம் கிளர்ச்சிகள்மூலம் பணியவைக்க முயன்றுள்ளமையை நாடு அறியும். அயலாட்சியை அகற்றிடக் கிளர்ச்சிகள் நடத்தியவண்ணம் இருந்தது காங்கிரசுக்கட்சி. அங்ஙனமிருந்தும், தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் உணவுப் போராட்ட ஊர்வலத்தினை எள்ளி நகையாடி இழித்துரைத்துள்ளமை வருந்தத்தக்கது.

"விலைவாசி உயர்ந்துவிட்டது என்று போலிக்கண்ணீர் வடித்துக் கொண்டு ஊர்வலம் செல்லலாம். இவ்வாறு போலிக்கண்ணீர் வடித்துச் செல்பவர்கள் யார் என்பதை மக்கள் உணர்ந்தே உள்ளார்கள்" என்று முதலமைச்சர் கூறினாராம். மக்கள் உண்மையை உணர்ந்துள்ளார்கள் என்பது உண்மை. உணவு நிலைச்சீர்கேட்டுக்குக் காரணம் யார் என்பதை மக்கள் நன்கு அறிந்துள்ளார்கள். ஆனால் ஆட்சியாளர் மக்கள் நிலையை அறிந்தும் அறியாததுபோன்று ஆட்சி செய்வதனால்தான் ஆட்சியாளரை அறிவுறுத்த இத்தகைய கிளர்ச்சிகள் வேண்டப் படுகின்றன.

திருடர்கள் காவல்துறைவேண்டாம் என்று கூறுவதுபோல் ஆளும்கட்சியினர் எதிர்க்கட்சியின் கிளர்ச்சிகள் வேண்டாம் என்கின்றனர், இது கிளர்ச்சிக்காலம், கிளர்ச்சியின்றேல் எதுவும் நடைபெறாது என்றநிலை ஏற்பட்டுவிட்டது. அமைதியான வன்முறையற்ற கிளர்ச்சிகளை மக்களின் நலன் அறிவிக்கும் கண்ணாடி என்றே கருதவேண்டும். கிளர்ச்சிகளைத் தம் கட்சியினர் நடத்தினால் மக்களின் எழுச்சி என்றும், மற்றவர் நடத்தினால் பிற்போக்காளரின் அழிசெயல்கள் என்றும் அறிவிப்பது மக்களாட்சி நெறிமுறையாகாது. முதலமைச்சர் அவர்கள் மாற்றுக்கட்சியினரை ஆங்கிலேயரின் அடிமைகள் எனக்கூறுதலில் ஒரு தனி இன்பம் காணுகின்றனர் போலும். வேண்டாதவர்களைச் சமயவாதிகள் 'நாத்திகர்' என்பது போன்று, இவர் மாற்றுக்கட்சியினரை "ஆங்கிலேயரின் நண்பர்கள்" என்று இழித்துரைத்து விடுகின்றனர், "ஆங்கிலேயன் ஆட்சி நடக்கும்போது இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் செத்துக் கொண்டிருந்தனர். அப்போது அவனைத் தாங்கிக் கொண்டிருந்தவர்கள்தான் இன்று கொடி தூக்கிச் செல்கின்றனர்" என்று திருவாய் மலர்ந்துள்ளனர். என்ன வியப்பு! இன்று கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளோரில் பல்லோர் அன்று அறியாப்பருவச் சிறுவர்களாகவே இருந்திருப்பர். ஆகவே அவர்கள் ஆங்கிலேயர் அடிமைகளாக இருந்திருக்கமுடியாது. மாற்றுக்கட்சியினரை என்ன கூறியும் இழித்துரைக்கலாம் என்பதைக் கைவிடுதல் நன்று. தனக்கு ஒன்று பிறர்க்கு ஒன்று என்பது என்றும் வேண்டாற்பாலது அன்று.

## வீடூர் நீர்த்தேக்கம் உடைப்பு

### எண்ணற்றோர் வீடிழந்தனர்; பதின்மர் இறந்தனர்

திண்டிவனம், நவ 7- சென்ற வியாழக்கிழமை வீசிய புயலினால் தென் ஆர்க்காடு செங்கற்பட்டு மாவட்டங்களில் பெரும் பொருளிழப்பு நேர்ந்துள்ளது. பெரிய நீர்த்தேக்கமான வீடூர் நீர்த்தேக்கத்தில் உடைப்பு ஏற்பட்டதன் விளைவாக அண்மையிலிருந்த சிற்றூர்கள் பல வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டன. பத்திற்கு மிகுதியானவர்கள் சுழற்காற்றினாலும் வெள்ளத்தாலும் இறந்திருப்பர் எனத் தெரியவருகிறது. நூற்றுக்கணக்கான குடிசைகளும், கட்டிடங்களும் வெள்ளத்தால் சிதைவுற்றன.

வெள்ளத்தால் துன்புறுவோர்க்குத் தக்க உதவிகள் மாநிலஅரசு, உள்ளூர்ப்பொது நலமன்றங்கள், தனியார் நிறுவன்ங்கள் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னையிலிருந்து விழுப்புரம்வரை உள்ள சாலைகளில் வேரோடு சாய்ந்த மரங்கள் அவற்றால் சாலையைக் கடந்து செல்ல முடியாதுநிற்கும்உந்து வண்டிகள், அங்கும் இங்கும் செல்ல முடியாது தவிக்கும் பொதுமக்கள் நிறைந்த காட்சியையே காணமுடிகிறது. புல்டோசர் மற்றும் பிறபொறிகளினால் சாலைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டுவருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தின் தென்பகுதிகள் வெள்ளத்தால் மிகுதியான இழப்படைந்துள்ளன. தென் செங்கற்பட்டு முழுமையுள்ளன. தொலைபேசி கம்பிச்செய்தி அனுப்பும் கம்பிகள் அறுபட்டும், கம்பி தாங்கும் தூண்கள் வளைந்தும்உள்ளன. ஆறுக்கும் மேற்பட்ட கூரைவேயப்பட்ட திரைப்படக் கொட்டகைகள் சுக்கு நூறாக உடைந்துள்ளன. இத்துணைக் கொடுமையான புயற் காற்றையும் வெள்ளத்தையும் இதற்கு முன்னர்க் கண்டதில்லை என இங்குள்ள வயது முதிர்ந்தவர்கள் கூறுகின்றனர். வெள்ளத்தின் சீற்றத்தினால் 5000 ஆடுகள் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

மதுராந்தகத்திலிருந்து திண்டிவனம் வரைவெற்றிலைக் கொடிக்கால்களும் வேர்க்கடலைப் பயிர்களும் முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டன.

அமைச்சர்கள் வருகை

விழுப்புரம்-காட்பாடி பகுதியில் மீண்டும் தொடர்வண்டிப் போக்குவரத்து தொடங்கியுள்ளது.

தகவல்துறை அமைச்சர் கோ. பூவராகன் இன்று புயலால் தாக்குண்ட பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டார்.

வீடூர் நீர்த்தேக்க உடைப்பால், சங்கராபணி ஆற்றில் பெருவெள்ளம் பாய்ந்தது. இதனால் விழுப்புரம் காவல்துறை நிலையம் வெள்ளத்தில் மூழ்கியது.

கீரைபாளையம், தெங்காத்தட்டு ஆகிய இரு சிற்றூர்களும் முழுக்க முழுக்க வெள்ளத்தில் மூழ்கிவிட்டன. காவல்துறையினரின் முன்கூட்டிய அறிவிப்பினால் சிற்றூர்களிலிருந்து மக்கள் வெள்ளம் வருமுன்னரேயே வெளியேறிவிட்டனர்.

உத்திரமேரூரின் அருகிலுள்ள வீரணன் குப்பம் நீர்த்தேக்கமும் விளாத்திவாக்கம் நீர்த்தேக்கமும் உடைப்புற்றமையால் ஆயிரம் பேர் வீடிழந்தனர். அரிசி, உரொக்கப்பணம் முதலியன அவர்களுக்கு அளிக்கப்பட்டனர்.

மின்னாற்றல் கிடைக்கப் பெறாமையால் செங்கற்பட்டும் அதன் அண்மையிலுள்ள சிற்றூர்களும் இருளில் மூழ்கியுள்ளன.

## இராமநாதபுரம் மாவட்டத்தோழர்கட்கு

### மு. கருணாநிதி அறிவிப்பு

"முகவை மாவட்டத்தில் தொடர்ந்து ஒன்பது நாட்கள் தேர்தல் நிதி திரட்டுகிற சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டு அதற்கான முயற்சிகளில் மாவட்டச் செயலாளர் நண்பர் எசு. எசு. தென்னரசு அவர்கள் ஈடுபட்டு, இடையில் செங்கற்பட்டு, தூத்துக்குடி மாநாட்டுத் தேதிகளின் மாற்றங்களினால் முகவை சுற்றுப்பயணமும் மாற்றி வைக்கப்பட்டது.

"தர்மபுரி—சேலம் மாநாடு, டிசம்பரில் மாநில மாநாட்டு அலுவல்களும், இடையிடையே நாடக நிகழ்ச்சிகளும், பம்பாய்—ஆமதாபாத் கூட்டங்களும் இருக்கின்ற காரணத்தால் தொடர்ந்து ஒன்பது வட்டங்களில் ஒன்பது நாட்கள் என்பதை இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

"முதற்கட்டச் சுற்றுப் பயணமாக நவ. 28, 29, 20, டிச. 1 ஆகிய நான்கு நாட்கள், சிவகங்கை பாராளுமன்றத் தொகுதியிலுள்ள அமைப்புக்களின் சார்பாக நடைபெறும் தேர்தல் நிதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள இருக்கிறேன்.

"அடுத்த கட்ட சுற்றுப் பயண நிகழ்ச்சிக்கான (இராமநாதபுரம், சிவகாசி, பாராளுமன்றத் தொகுதிகள்) நாட்களை விரைவில் அறிவிக்கிறேன்.

"முதற் கட்டச் சுற்றுப் பயண நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளுக்கு மாவட்டச் செயலாளர் அவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்"

என பொருளாளர் மு. கருணாநிதி எம். எல். ஏ. அவர்கள் அறிவிக்கிறார்.

—★—

## தியாகராசர் கல்லூரி மாணவர்களின் படிப்பு நிறுத்தம்

மதுரை நவ. 8— தியாகராசர்கல்லூரி புகுமுக வகுப்பு மாணவர்களை விரிவுரையாளர் ஒருவர் இழிவான முறையில் பேசியதை யொட்டி கடந்த இரண்டு நாட்களாக புகுமுக வகுப்பு மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்தனர். அதைத்தொடர்ந்து அந்த கல்லூரி மாணவர்கள் அனைவரும் இன்று படிப்பு நிறுத்தம் செய்ய முடிவெடுத்திருப்பதாகத்தெரிய வருகிறது.

## இன்றைய நிகழ்ச்சிகள்:

### நாகப்பட்டினம்

கலைஞர் கருணாநிதி படிப்பகத் தேர்தல் விளக்கப்பொதுக் கூட்டம்.

இடம்: கீரைக்கொல்லைத் தெரு நாகை முதல் வட்டம்,

சிறப்புரை:
பெ. சீனிவாசன் எம். ஏ.

பேசுநர்:
கே. செல்வராசு
கே. கே, சித்திரவேலு
மா. தருமராசன்
அ. இராமாசாமிக்கம் பி. ஏ., பி. எல்.
இராசையன் பி. ஏ. பி. எல்.
எசு. தியாகராசன் பி. ஏ. பி., எல்.

# தேர்வில் தோல்வியுறும் மாணவர்கட்குப் பயிற்சி வகுப்புகள்!

## கல்லூரிகளில் நடத்த முடியுமா?

### பேராசிரியர் சங்கரநாராயணன் அறிக்கை

சென்னை நவ. 7— சென்னை மதுரைப் பல்கலைக் கழகங்களின் பேரவை உறுப்பினரும், மதுரை மாணவர் தனிப் பயிற்சிக் கல்லூரிமுதல் வருமானபேராசிரியர், சங்கரநாராயணன், செய்தி இதழ்களுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தமிழக முதலமைச்சர் சட்ட மன்றத்தில் பேசும்பொழுது "தேர்வில் தோல்வியுறும் மாணவர்களுக்கு கல்லூரிகளிலேயே தனியாகப் பயிற்சி தரவேண்டும், தற்பொழுது மாலை நேரக் கல்லூரிகள் செயற்படுவதால் இப்பயிற்சி வகுப்புகள் மாலை நேரங்களில் நடைபெறுமென்றும் சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தரும் கல்லூரிகள் தேர்வில் தோல்வியுறும் மாணவர்கட்குத் தனிப்பயிற்சி நடத்துவதை வரவேற்கிறார் என்றும் கூறியுள்ளதாகச் செய்தி இதழ்களில் வெளிவந்துள்ளது.

21—10—66-ஆம் நாள் நடைபெற்ற பல்கலைக் கழகக் கல்விக் குழு கூட்டத்தில் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தைக் கொண்டு வர ஒப்புதல் கேட்டேன்.

"மார்ச்-ஏப்ரல், செப்டம்பர் அக்டோபர் தேர்வுகளில் தோல்வியுறும் கல்லூரி மாணவர்களுக்கு பருத்துவக் கல்லூரிகளில்நடத்தப்படுவது போல அடுத்து நடக்கும் பல்கலைக் கழகத் தேர்வுகள் எழுதும் வகையில் கல்லூரிகளிலேயே பயிற்சி நடத்துவதற்கான வழி வகைகளை பேரவைக் குழு ஆய்ந்து அடுத்த கல்விக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கவேண்டும்".

கூட்டத் தலைவரும் சென்னைப் பல்கலைக் கலைக்கழகத் துணைவேந்தருமான டாக்டர் இலக்குமணசாமி (முதலியார்) "இத்தகைய பயிற்சிகள் சில ஆண்டுகட்கு முன் தொடங்கப்பட்டுத் தோல்வியுற்றன. எனவே இத்தீர்மானத்துக்கு, ஒப்புதலளிக்க முடியாது;" எனக் கூறிவிட்டார்.

பல்கலைக் கழகத் துணைவேந்தர் தமது எண்ணத்தை மாற்றிக்கொண்டு மீண்டும் இவ்வாய்வு நடாத்த முன்வருவார் என நம்புகிறேன்.

பல்வேறு அலுவலகங்களில் தொழில் புரிவோர் பயில்வதற்காக உள்ள மாலை நேரக் கல்லூரிகளையும் தோல்வியுறும் மாணவர்கட்கு நடத்தப்பெறும் மாலை நேர வகுப்புக்களையும் ஒப்பிடுவது சரியன்று. சான்றாகப் பகலில் நடைபெறும் கல்லூரிகளில் புகுமுக வகுப்பு மாணவர்களின் காலம் ஓராண்டாகும். மாலை நேரக் கல்லூரிகளிலோ பயிற்சி இரண்டாண்டாகும். மாலை நேரக் கல்லூரிகளில் நாள் தோறும் மூன்று மணி நேரமே பாடம் நடத்தப்படுகிறது; ஆனால் தோல்வியுறும் மாணவர்கள் ஓராண்டில் படித்தவற்றை மூன்றே மாதங்களில் திரும்பப் படிக்கவேண்டும். எனவே இவர்கட்கு நாள்தோறும் ஆறு மணி நேரம் பயிற்சியாவது தரவேண்டும்.

இது தவிர அறிவியல் மாணவர்கட்கு ஆய்வுக் கூடப் படிப்பு உள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு இணைக்கப்பட்ட கல்லூரிகள் அரசினரும் பல்கலைக் வழி காட்டுதலுடன் தோல்வியுறும் மாணவர்கட்குப் பயிற்சி தரும் இக்கூடுதலான பொறுப்பை நேர்மையாகவும் உண்மையாகவும் ஏற்றுக்கொண்டால் அது வரவரவேற்கத் தக்கதே.

> ## "குறள்நெறி" நாளிதழ்
>
> தனி இதழ் விலை காசு 6.
>
> அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு 2-50
> ஆண்டுக்கட்டணம் உரு. 25-00
> புரவலர் கட்டணம் உரு. 1000-00
>
> விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
> விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25% கழிவு உண்டு.
>
> "குறள் நெறி" திங்களிருமுறை: தமிழ்:
> தனி இதழ் விலை 25 காசு.
> ஆண்டுக் கட்டணம் உரு. 6-00
> இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00
> புரவலர் கட்டணம் உரு 100-00
>
> "குறள்நெறி" திங்களிருமுறை: ஆங்கிலம்:
> தனி இதழ் விலை 20 காசு.
> ஆண்டுக் கட்டணம் உரு 5-00
>
> ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்
>
> விவரங்கட்கு:
> ஆசிரியர்
> 'குறள்நெறி'
> திருப்பரங்குன்றம்
> மதுரை—5

## "குறள்நெறி"யைத் தடுக்க குறிஞ்சியின் முயற்சி!

### முதலமைச்சரிடம் முறையீடு

மதுரை, நவ. 7- "குறள்நெறி" நாளிதழைத் தடுக்கவேண்டுமென்று "குறிஞ்சி" ஆசிரியர் திரு. நெடுமாறன் தலைமையில் சில காங்கிரசுக்காரர்கள் தமிழக முதலமைச்சரிடம் வேண்டி முறையிட்டனராம். அவரும் "பார்க்கலாம்" என்று கூறினராம் எனத் தெரிகின்றது.

நற்றமிழ் காத்தலும், நல்லாட்சி நிறுவலும் குறள்நெறியின் குறிக்கோள்களாகும். இவை கண்டு பொருக "குறிஞ்சி"யின் நிலை கண்டு இரங்குகின்றோம். கட்சி வெறிக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை "குறிஞ்சி"க்கு நினைவூட்டுகின்றோம்.

## திருக்குறள் பரிசு

### மலேயா தலைமையமைச்சர் பெற்றார்

தமிழகப் பெருநாவலர் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் இப்பொழுது மலேயாவில் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றிக்கொண்டுள்ளார். அவர் மலேயா முதலமைச்சரைக் கண்டு தாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ள திருக்குறளை அவருக்குப் பரிசாக அளித்தார். 'இது உலகப் பொது மறை' என்று கூறிக் கொடுத்தார். இருபது மணித்துளி கடந்தஇக்கூட்டத்தில் இருவரும் உளம் விட்டு அளவளாவினர்.

தமிழகப் பெருமையை தலைமையமைச்சருக்கு எடுத்துரைத் திருப்பார் என்பதில் ஐயமின்று.

## பல்பொருள் பேரங்காடி

மதுரை ஐப்பசி 23- நேற்று மாலை இங்கு பேரங்காடி (சூபர் மார்க்கெட்டு) கூட்டுறவு அமைச்சர் மன்றாடியார் தலைமையில் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் இது மூன்றாவதாகும், ஏனைய இரண்டும் சென்னையிலும் திருச்சியிலும் அமைந்துள்ளன. கூட்டுறவுச் சங்கம் இவைகளை நடத்தும் இக்கடைகளில் அன்றன்றாடம்வாழ்க்கைக்கு வேண்டியன கிடைக்கும்.

இன்று முதல் இக்கடை விற்பனை தொடங்கும். இதை அமைக்க உருபாய் ஐந்து நூறாயிரம் ஆயிற்றும்.

## அனைத்துக் கட்சிகளின்,...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் வாக்கு எதிர்க்கட்சிக்கே என்று கூறுமாறு கேட்டுக் கொண்டார்.

பங்கசத்தம்மாள் (ச. சோ) பேசுகையில்:

"அயலார்ஆட்சியை ஒழிக்க ஆயிரக்கணக்கில் தூக்கு மேடையேறவும், குருதி சிந்தவும் தயாராயிருந்த நாம் இன்று ½ லிட்டர் அரிசிக்காக கூட்டம் கோடும் அவல நிலை காங்கிரசு ஆட்சியில் ஏற்பட்டுள்ளது. மயிலே, மயிலே இறகு போடு என்றால் போடாது அதைப் போல் காங்கிரசிடம் எதிர்பார்க்காமல் ஆட்சியை மாற்றி அமைக்க பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

திருமதி விரலட்சுமி உடையப்பா கூறியதாவது:

இன்று நாட்டின் உணவுப் பஞ்சத்திற்குக் காரணமான பதுக்கல் காரர்களையும், கள்ளச் சந்தையினரையும்வளர்த்தவர்கள் காங்கிரசுகாரர்கள் என்று 2—7—66 அன்று பஞ்சாபிலுள்ள லூதியானாவில் குடியரசுத் தலைவர் கூறியிருக்கிறார். இதை விட காங்கிரசு ஆட்சிக்கு நற்சான்று வேண்டுமா"? எனக் கூறினர்.

குளித்தலை ராமதாசு பாரதி (சுதந்திரா) கூறியதாவது:

இன்று நாட்டில் உணவுச் சிக்கலுக்குக் காரணம் மக்கட் பெருக்கம் என்று காங்கிரசு கூறுகிறது. இது முறையற்றதாகும். முப்போகம் செல் விளைந்த நிலத்தில் இன்று கரும்பு நிற்கிறது. மக்களுக்கு முதலில் என்ன தேவையென்பதை அறியாமல் சர்க்கரையில் தன்னிறைவு என்று கூறுகிறார்கள். விளை நிலங்கள் பெருகியிருக்கின்றன. நீர்ப்பாசன வசதியும் இருக்கும் பொழுது உணவுப் பஞ்சம் ஏன் ஏற்பட்டது. இதைக் கேட்டால் மந்திரிகள் "சூப் சாப்பாடுகள், பால்சாப்பிடுங்கள், மீன் சாப்பிடுங்கள்" என்று கூறுகிறார்கள். அடங்காப்பிடாரியை (காங்கிரசு) மணந்து கொண்டால் வீட்டில் அமைதி இருக்காதாகையால் ஆட்சியை எதிர்க்கட்சி கைப்பற்ற வேண்டும் என்று கூறினர்.

"கு. திருப்பதி (தி. மு. க) இந்தியா உழவு நாடாக இருந்தும், வளம் பொருந்திய ஆறு பல இருந்தும் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது. தொழிற்துறையில் முன்னேறியிருந்தாலும், உணவுத்துறையில் பின் தங்கியிருப்பதை மன்னிக்கலாம். இந்தியாவின்தேவைக்கு 4-ல் 1 பங்குதான் உரம்கிடைக்கிறது என்று அளகேசன் கூறியிருக்கிறார். 19 வருட ஆட்சியில் நிகழ்ந்தது இதுதானா?

பீகாரில் காமராசர் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் பிளாசுடிக் பைகளில் கோதுமை வைத்து எறியப்பட்டது. காங்கிரசு கொடுத்த கோதுமை அவர் முகத்தில் எறியத்தான் தகுதி என்பதை இது காட்டுகிறது. கேரளத்தில் உணவுப் பிரச்சனை தோன்றிய சமயம் குமுறிய மக்கள் அரச குடும்பத்தை அகற்றி, ஆட்சியில் இருக்கும்போது ஏளனம் செய்த ஒரு மேயரைக் கட்டியிழுத்து வந்து புல்லைத் தின்னச் செய்தனர். அதைப் போல நாங்கள் 67-ல் ஆட்சியைக் கைப்பற்றி பக்தவத்சலத்தின் வாயில் எலியைத் திணிக்கமாட்டோம். தங்களுடைய வாழ்க்கை வசதிகளை மட்டும் உயர்த்திக் கொண்ட காங்கிரசு ஆட்சியை புதைகுழியில் புதைக்க வேண்டும். இங்கு கூடியிருக்கும் 10 கட்சிகளும் கருத்து வேறுபாடிருப்பினும், கொள்கை வேறுபாடிருப்பினும் வருகிற 67 தேர்தலில் ஒத்துழைத்து காங்கிரசை இருந்தவிடம் தெரியாமல் போட்டியில் சந்திக்குமாறு கேட்டுக்கொண்டார்.

என். சங்கரய்யா (கம்) "காங்கிரசுக்காரர்கள் நம்மை நாசகாரர்கள் என்று கூறி வருகின்றனர், உணவு தர முடியாத நீங்கள் நாசகாரர்களா! உணவுக்காகப் போராடும் நாங்கள் நாசகாரர்களா! பதவி ஆசையின் காரணமாக எதிர்க்கட்சி ஒன்று கூடுகிறது என்று கூறும் பக்தவத்சலம் 1947-ல் இருந்து மந்திரி பதவி என்ற நாற்காலியில் அமர்ந்திருப்பதை மறந்துவிட்டார். நெல் விளைச்சலில் எங்கும் குறைவில்லை. பொருளை பகுத்துக் கொடுத்தலில்தான் குறை உள்ளது. காங்கிரசு பேசுவது சமநிலை என்பதை நடத்துவது கொடுங்கோன்மையாகும். அவர்களிடம் கள்ளச்சந்தை பணமும், கறுப்புப் பணமும் இருக்கும். அதைப் பெற்று காங்கிரசிற்கு ஓட்டுப் போட்டு விடாமல் எதிர்க்கட்சி கூட்டணிக்கு ஆதரவு தருமாறு கேட்டுக் கொண்டார்.

## தொடர் வண்டி ஓட்டிகள் மிகுவேலைக்கு எதிர்ப்பு

மதுரை, நவம். 7— திருவனந்தபுரம் விரைவு வண்டி நேற்றுச்சென்னையிலிருந்து புறப்பட்டு வந்தது அயலூரை அடைந்ததும் நின்று விட்டது அதனை ஓட்டி வந்த வலவர் (ஓட்டி) தமது பணி நேரம் முடிந்து விட்டதால் அதற்குமேல் ஓட்ட முடியாது எனக்கூறிப்போய்விட்டார்,

இவ்வண்டியில் தான் தமிழக முதலமைச்சர் பக்தவத்சலமும் ஏறி வந்தார். "வேலை நேரத்துக்குமேல் வேலை பார்த்தால் மிகுதியான ஊதியம் கிடைக்குமே' தொழிலாளர்கள் இப்படி யெல்லாம் பொருளற்ற முறையில் நடப்பது கூடாது." என்று கூறினார். பொருளே விரும்பா வலவர்க்கு இது புரியாது.

மதுரை மாணவர் குழு

திரு. பா. செயப்பிரகாசம் (எம். ஏ)

நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| நவ | 12. | திருமங்கலம் |
| | 13. | மதுரை திலகர்திடல் |
| | 17. | விரகனூர் |
| | 18. | ஆரப்பாளையம் |
| | 20. | புதூர் |
| | 25. | வாடிப்பட்டி |
| | 27. | சோழவந்தான் |
| | 29. | அலங்காநல்லூர் |

### மேலச்சிவபுரி

நவ, 4- மேலச்சிவபுரி, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மாணவர் நன்னெறிக் கழகத்தின் சிறப்புக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. புலவர் உயர்திரு சோமசுந்தரனார் தலைமை தாங்கினார் மதுரைப் பல்கலைக் கழக விரிவுரையாளர் பண்டாரகர் மெ. சுந்தரம் அவர்கள் "எட்டில் எழுதா இலக்கியம்" என்ற பொருள் பற்றி பேசினார். முடிவில் கழகச் செயலர் சுப்பையா நன்றி கூறினர்.

## காலமானார்

சென்னை, நவ. 7- சென்னை அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சாமுவேல் அரங்கநாதன் இன்று காலமானார்.

இவர் பிரிட்டனில் இந்தியத் தூதராகவும் இருந்துள்ளார்.

## அன்பர் அஞ்சல்

### "சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்"

ஐயா வணக்கம்.

இந்தி முதன்மையை எதிர்த்து கடந்த ஆண்டு தமிழக முழுவதும் மாணவர்கள் போராடியதையும் எண்ணற்றோர் துப்பாக்கிக் குண்டிற்கும், செந்தீயினுக்கும் இரையானதையும் தமிழகம் மறந்தாலும் வரலாறு மறக்காது. உரிமைப் போராட்டத்தில் தமிழகம் இழந்ததைக் காட்டிலும் மொழிப் போராட்டத்தில் உயிரிழந்தோர் தொகை அதிகமாகிவிட்டது. எனவே சுடுவதை நிறுத்துங்கள் என்று திருச்சி காங்கிரசுக் கட்சியின் செயலர், அப்போதிருந்த தலைமையமைச்சருக்குக் கம்பிச் செய்தியின் மூலம் அனுப்பும் அளவிற்கு நடந்தது அப்போராட்டம். நடுவணரசின் அமைச்சர் பதவியின்றி திரு. சுப்பிரமணியமும், திரு. அளகேசனும் விலகினர்கள். தமிழகம் இதுவரை காணாத அத்துணை நிகழ்ச்சிகளையும் அன்று கண்டது. அப்படியிருந்தும் மாணவர்கள் வேண்டுகோளை இம்மக்களாட்சி மதிக்கத் தவறிவிட்டது, போராட்டத்தை நிறுத்துங்கள் மொழிச் சிக்கலை தீர்க்கின்றோம்.' என்று கூறியவர்கள் இதுவரை தீர்க்கவில்லை.

ஆனால் கடந்த மாதம் எந்த அடிப்படையும் இன்றி ம. பிரதேசம், உ. பிரதேசம், இராசசுதான் பீகார் ஆகிய இந்தி மாநிலங்களில் மாணவர்கள் கிளர்ச்சி நடத்திய போது, அக்கிளர்ச்சியில் இறந்து பட்டோருக்காக அமைச்சர் நந்தா ஆழ்ந்த வருத்தம் தெரிவித்தார். காங்கிரசுக் கட்சியின் செயற்குழுவினர் அரசினைச் சந்தித்து, மாணவர்கள் வேண்டுதல்களை நிறைவேற்ற வேண்டிக் கொண்டார். அரசும் பல மாநிலங்களின் உயர் காவல்துறை அலுவலர்களைக் கூட்டி ஆய்வு நடத்தியது. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் உள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களை அழைத்து மாநாடு நடத்தியது. அதில் அனைத்திந்திய மாணவர் சார்பாளர்களையும், ஆசிரியர்களையும் அழைத்து விரைவில் மாநாடு நடத்த வேண்டும் எனவும், அனைத் தேவ்ண்டும் எனவும், அனைத்திந்திய மாணவர் அமைப்பை நிறுவவேண்டும் என்றும் தீர்மானம் எடுத்தனர். தமிழக மாணவர் அமைப்பைப் பழித்தோரே இது எதற்கு? மொழிச் சிக்கலைத் தீர்க்க முன் வராதோரே! இவர்கள் (வடவர்மாணவர்) அடிப்படைச் சிக்கல்தான் என்ன? இருநூற்றைம்பதிற்குமேல் செத்த தமிழர் மீது வராத இரக்கம் ஏழெட்டு வடவர் செத்த போது எப்படி வந்தது? நந்தாவிற்கு தமிழர்களிடம் வாக்குப் பெற வேண்டிய கட்டாயமில்லை, என்பதால்தான் இந்த ஓரவஞ்சனையா?

இந்தியா எதிர்காலத்தில் காணப்போகும் பேரழிவுக்கு முன்பே தாம் அழிந்து விடுவோம்' என்ற எண்ணத்தால் தான் இத்துணை அறங்கடந்த செயல்களுமா? எல்லோருக்கும் 'சமவாய்ப்பு' என்று எக்காளமிடும் சனநாயக சோசலிச வாதிகளே, எங்கே சமநீதி?

நீங்கள் கொண்டு வரும் திருத்தம் தமிழர்கள் நலமும் தமிழ்மொழியின் நலமும் குறைவு படாதிருக்க வேண்டும் என்பது மட்டுமின்றி இந்தியாவின் ஒற்றுமைக்குக் கேடு விளையாதிருக்கும் வகையில் அனைத்து மொழிகளும் சமநிலை பெறுமாறு அமைய வேண்டும், அப்பொழுதுதான் மக்களாட்சிநிலைக்கும். அன்றி பாராளுமன்றப் பெரும்பான்மை பெற்றதாகக் கூறி ஏதேனும் தவறான திருத்தம் நடைபெறுமேயானால், இந்தியா இருநூறு ஆண்டுகட்கு முன்னிருந்த நிலையினை எய்தும் என்பதை அறிக. மண்டையைப் போட்டு உடைத்துக் கொள்வதால் மட்டும் எப்படி ஒரு சிக்கல் தீராதோ, அது போல் மண்டைகளை மட்டும் எண்ணுவதால். (அதிக வாக்கால்) இந்திச் சிக்கலோ வெறெந்தச் சிக்கலோ தீர்ந்து வுட்டதாக எண்ணாதீர். "நாம் ஒரு பெருங்கூட்டம். அஃதோர் சிறு கும்பல்" என்று எங்களைக் குறைத்து இழித்து எண்ணாதீர். சிறு பான்மையினர்தாம் பெரும்பான்மையினரின் விதியையே நிலைநாட்டுகின்றனர். என்ற பேருண்மையை மறந்து விடாதீர். மதித்து நடங்கள். மன்னிப்பு பெறலாம்.

ம. நடராசன், தஞ்சை.


மதுரை: 8—11—66 செவ்வாய்

# குறள்நெறி

வெளியூர்: 9—11—66 புதன்

## தொடர் வண்டிச் சுமையாளர்கள் மாநாட்டில் காமராசர்!

புதுதில்லி, நவ 7-
இங்கு நடைபெற்ற தொடர் வண்டிச் சுமையாளர்கள் கூட்டத்திற் பங்குகொண்டு பேசிய காங்கிரசுக் கட்சித் தலைவர் காமராசர், நம் நாட்டில் மிகுதியாக உள்ள ஏழை மக்கள் அனைவரும் ஓயாத கடும்



உழைப்பினாலேயே முன்னேற இயலும் எனக் குறிப்பிட்டார்.

நூறாயிரக்கணக்கான ஏழை மக்களின் நலனில் அரசு அக்கறை காட்டி வரும்பொழுது சில எதிர்க்கட்சிகள் ஆரவாரத்திலும் வேலை நிறுத்தத்திலும் ஈடுபட்டுள்ளன எனவும், பேருந்து வண்டிகளையும் தொடர்வண்டிகளையும் கொளுத்தி விடுவதனால் வறுமை ஒழிந்து விடாது எனவும் அவர் குறிப்பிடடார்.

தொடர் வண்டிச் சுமையாளர்களின் இரண்டாவது அனைத்திந்திய மாநாட்டைத் தொடங்கி வைக்கும்பொழுது இம்மாநாட்டுக்கு அனுப்பியிருந்த செய்தியொன்றில் தலைமை அமைச்சர் தொடர்வண்டிச் சுமையாளர்களின் நலனை முன்னேற்ற ஆவன செய்யப்பட வேண்டுமெனவும் அவர்களோடு அனைவரும் தோழமையுடனும் பணிவன்புடனும் நடந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

காமராசர் தொடர்வண்டிச் சுமையாளர்கள் கட்சி அரசியலில் ஈடுபடக்கூடாதெனவும் தொடர்வண்டித்துறை அமைச்சர் அவர்களின் குறைவுகளை நீக்கிட ஆவன செய்வாரென்றும் உறுதிமொழி அளித்தார்.

துறைமுகத் தொழிலாளர்களைப் போன்றே தாங்களும் நடத்தப்பட வேண்டுமெனத் தொடர்வண்டிச் சுமையாளர்கள் தங்கள் தீர்மானம் ஒன்றில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தங்கள் நலனைப் பேண ஒரு தொழிலாளர் நல அலுவலர் வேண்டுமென்றும் வாழ்க்கைத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு சுமைக்கூலி உயர்த்தப்படவேண்டுமென்றும், ஒப்புரிமைச் சீட்டுக்காகத் தங்களிடம் வாங்கிக் கொள்ளப்படும் தொகையில் ஒரு பகுதியைத் தங்கள்எய்ப்பில்வைப்பு நிதிக்கு ஒதுக்க வேண்டும் என்றும் அவர்கள் தங்கள் தீர்மானங்களில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்பட வேண்டுமென அவர்கள் வேண்டுகோள் விடுத்துளர்.

இம்மாநாட்டில் தொழிலாளர் அமைச்சர் சகசீவன் இராமும் தொழில் துறை அமைச்சர் சஞ்சீவையாவும் பங்கு கொண்டு உரையாற்றினர்.

பலகோவிந்தவெர்மாஎன்ற பாராளுமன்ற உறுப்பினர் மாநாட்டுக்குத் தலைமை தாங்கினர்.

## ஊர்வலத்தில் ஒரு காட்சி

மதுரை, நவ, 7-
ஊர்வலத்தின் கடைக் கோடியில் ஒரு சரக்கு-உந்தில் ஒரு காட்சி அமைக்கப்பட்டிருந்தது. தொந்தி பெருத்த ஆளுங்கட்சியினர் ஒருவர் நிற்கின்றார். அழுக்கேறிய கிழிந்த உடைக்கோலத்துடன் "அரிசி போடுங்கள்" என்று ஒருவர் இரக்க, உடல்பெருத்தவர் "பொறுத்திடுக பொறுத்திடுக!" என்று அமைதிப்படுத்துகின்றார்.

இக்காட்சி இன்றுள்ள நிலைமையை நன்கு காட்டியது.

## தேவை

குறள்நெறி நாளிதழ் விற்பனை செய்ய எல்லா ஊர்களுக்கும் விற்பனையாளர்கள் தேவை.

இப்படிக்கு
செயலர்,
குறள்நெறி.

## அனைத்துக்கட்சிகளின் அணிபெறு ஊர்வலம்

மதுரை, நவ. 7-
நேற்றுமாலை மதுரை நகரில் மாபெரும் ஊர்வலம் கண்டோர் வியக்கும் வகையில் கண்கொள்ளாக் காட்சியாகச் சென்றது. காங்கிரசு தவிர்த்த பிற எல்லாக் கட்சியினரும் ஒன்று திரண்டு தத்தம் கட்சிக் கொடிகளைத் தாங்கிச் சென்றனர்.

மணல் மேட்டில் தொடங்கிய ஊர்வலம் இராமநாதபுரம் சாலை, தெற்கு மாசி வீதி, மேலமாசி வீதி வடக்கு மாசி வீதி, யானைக்கல் வழியாகத் தமுக்கப் பெருவெளியை அடைந்தது. அமைப்பாளர் கார்மேகம் தலைமை தாங்கினர்.

ஊர்வலமுடிவில் அவர் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. திருவாளர்கள் கு. திருப்பதி (தி. மு. க) என். சங்கரய்யா (இ. பொ) செரிப் (லீக்) என். கிருட்டினசாமி (வ.பொ) பாகுலேயன் (பி.சோ) கிருட்டினமூர்த்தி (ச.ச) பங்கசத்தம்மாள் (ச. சோ) வீரலட்சுமி உடையப்பா (த. அ) இராமதாசு பாரதி (சு) கே. சி. வீரராகவன் (மு.க) ஆகியோர் உணவுப் பற்றாக் குறையின் கொடுமையையும் ஆட்சியினரின் இயலாத் தன்மையையும் விளக்கி உரையாற்றினர். உணவுப் போராட்டத்தின் தொடர்பாகக் கடையடைப்பு வேலை நிறுத்தம் முதலியனவும் நடைபெறும். இவைபற்றி முடிவு செய்ய 9-ஆம் நாள் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெறும்.

திரு. கே. சி. வீரராகவன் (முன்னேற்றக் கட்சி) பேசுகையில் 18 ஆண்டுக்கால ஆட்சி முடிந்து 19-ம் ஆண்டில் காலடி வைத்திருக்கும் காங்கிரசு இன்று மக்களுக்கு உணவு கொடுக்கத் தவறிவிட்டது. கிளர்ச்சிகளுக்குப் பிறகுதான் நமது கோரிக்கைகளை ஆட்சி உணரவாரம்பிக்கிறது. பல மாணவர்களின் உயிரைக் குடித்த பிறகுதான் இந்தி ஆட்சிமொழி ஆவதைத் தள்ளி வைத்தது. காங்கிரசு நல்ல நாய் என்றுதான் அனுப்பினோம். ஆனால் அது வெறி பிடித்த நாயாக அலைகிறது.

ஆகையால் வரும் 67-தேர்தலில் காங்கிரசு ஆட்சியைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகளுக்கு முன்னேற்றக் கட்சி பூரண ஒத்துழைப்பை நல்கும் என்று கூறினர்.

திரு. எசு.எம். செரீப் (லீக்) பேசுகையில்:

மதுரை மாநகரம் இதுவரை 3 பெரும் அனைத்துக் கட்சி ஊர்வலத்தையும், பொதுக் கூட்டத்தையும் கண்டிருக்கிறது. ஒன்று நேரு மரணமடைந்த போது கொடிபிடிக்காமல் நடந்தது. இரண்டாவது சாத்திரி மரணமடைந்த போது கொடி பிடிக்காமல் நடந்தது. மூன்றாவது இன்று உணவு வேண்டும் என்று அனைத்துக் கட்சிக் கொடிகளுடன் நடக்கின்றது. காங்கிரசு ஆட்சியே எங்களுடைய உணவு வேண்டுகோளை கவனியுங்கள், இல்லை கீழே இறங்குங்கள். காங்கிரசு ஆட்சியில் எங்கும் பஞ்சம் தலை தூக்கி நிற்கிறது. சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்ததைப் போல பேரணி என்ற பெயரில் பொதுக்கூட்டம் நடத்தி எதிர்க்கட்சிகளை வசைமாரி பொழிந்ததைப் பார்த்த தாய்க்குலமும், பொதுமக்களும் பொங்கியெழுந்து இன்று ஊர்வலத்திலும் பொதுக் கூட்டத்திலும் கலந்து கொண்டுள்ளனர். இது 67-ல் எதிர்க்கட்சி வெற்றிபெறுவதற்கு உதாரணம் என்று கூறினர்.

கிருட்டிணமூர்த்தி (சனசங்கம்) பேசுகையில்:

காங்கிரசு ஆட்சி எதற்கொடுத்தாலும் அயல்நாட்டு உதவியை நாடி நிற்கிறது. உணவு வேண்டுமா அயல்நாட்டு உதவி, தொழிற்சாலை நிறுவவேண்டுமா அந்நிய உதவி, அணைகள் கட்டவேண்டுமா அயல்நாட்டு உதவி, இப்படியே சென்று கொண்டிருந்தால் ஆட்சி நடத்தவும் அந்நிய உதவியை நாடவேண்டி வந்து விடும். காங்கிரசுக் கட்சி எதையும் தீர்ந்து போனவை என்று கூறி வருகிறது. மொழிச் சிக்கல் வந்தது அது தீர்ந்து போன சிக்கல் எல்லோரும் ஒன்றுபடுங்கள் பாகிச்தான் யுத்தம் வந்தது எல்லோரும் ஒன்றுபடுங்கள் உணவுசிக்கல் வந்தது அது தீர்ந்து போன சிக்கல் எல்லோரும் ஒன்று படுங்கள், என்று கூறிக் கொண்டு வரும் காங்கிரசு மக்களிடம் 67-தேர்தல் வாக்குக் கேட்க வரும் பொழுது அதுதீர்ந்து போன சிக்கல்

(2-ம் பக்கம் பார்க்க)

## இத்தாலியிலும் பெரும் வெள்ளம்

## 83 பேர் கொல்லப்பட்டனர்!

உரோம், நவ. 7-
இதற்கு முன்னர் என்றும் ஏற்பட்டிராத் அளவு பெரும் வெள்ளம் இத்தாலியைத் தாக்கிச் சீரழித்துள்ளது,

பிரான்சிலிருந்தும், சுபெயினிலிருந்தும் மழைமேகங்கள் மீண்டும் வட இத்தாலியை நோக்கிப் படையெடுத்துள்ளன.

மணலிலிருந்தும் சேற்றிலிருந்தும் எண்பத்துமூன்று சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளன. இன்னும் எத்தனை பேர் இறந்துள்ளனர் எனத் தெரியவில்லை.

வெனீடோவில் 4000 போர் வீரர்களும வெள்ள மீட்பு வேலைகளில் ஈடு பட்டுள்ளனர். புளொரென்சிலுள்ள கலைக்களஞ்சியமும் வெள்ளத்தால் தாக்கப்பட்டுவிட்டது,

உபிசிக் கலைக்கூடத்தில் 1,30,000 புகைப்பட எதிர்சுருள்கள் அழிக்கப் பட்டுள்ளன. அவற்றுடன் வண்ண ஓவியங்கள் சிலவும் அழிவுற்றன.

புளொரென்சு முழுமையும் வெள்ளத்தால் வன்மையாகத் தாக்கப்பட்டுள்ளது. ஓரிடத்தில் 27 உந்து வண்டிகள் பெரும் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு ஒரு சுவரில் மோதி வரிசையாக வீழ்ந்துள்ளன. வெள்ளத்தினின்றும் தப்ப கூரைமேல் ஏறி அமர்ந்துள்ள பொது மக்களைக் காப்பாற்றப் படை வானூர்திகள் விரைந்தன.

உலகப்புகழ் பெற்ற ஆண்ட்ரு டிசார்டோவின் ஓவியம் வெள்ளத்தினால் கொண்டுசெல்லப்பட்டு விட்டது. மற்றும் கணக்கற்ற பதினாறும் நூற்றாண்டு ஓவியங்களுக்கும் இந்த அவலநிலை நேர்ந்துள்ளது.

பார்க்கெல்லோப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த படைக்கலன்களின் தொகுப்பு ஒரு சகதிக் குவியலுக்குள் சிக்கிவிட்டது.

அறிவியல் வரலாற்றுப் பொருட்காட்சியில் வைக்கப் பட்டிருந்த மெழுகு மாதிரிகள் அழிக்கப்பட்டுவிட்டன எனவும் தெரிகிறது.

—

## பதேசிங்கின் "காலவரையறை"

அமிர்தசரசு நவ 7-
பஞ்சாபி சுபாவுக்கும் அரியானாவுக்கும் இடையே உள்ள பொது வழி நீக்கப்பட வேண்டுமென்றும், பஞ்சாபி பேசும் பகுதிகளும் சண்டிகாரும் பஞ்சாபி சுபாவில் இணைக்கப் படவேண்டுமென்றும் சாந்த்பதேசிங் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் இவ்வேண்டுகோள் நிறைவேற்றப்பட ஒரு கால வரையறையும் அளித்துள்ளார்.

நவம்பர் 12-ஆம் நாளே இக்கால வரையறையாகும். இந்நாளுக்குள் தனது வேண்டுகோள் நிறைவேற்றப்படாவிட்டால்தான் அடுத்து செய்யப்போவதைக் குறித்து நவம்பர் 12-ஆம் நாளிலேயே விளக்கிக் கூறப் போவதாகவும் முன்பு அறிவித்தவாறு நவம்பர் 25—ஆம் நாளில் கூறப் போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம்: ,மதுரை 5 தொலைபேசி 8:65